[1979 ஏப்ரல் 27

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இரவில் ஆறு மணி நேரமும் பகலில் நான்கு மணி நேரமும் தடை இல்லாமல் தொடர்ந்து மின்சாரம் வழங்கவேண்டும் என்று மின்சார வாரியத்திற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. சில நேரங்களில் தவறுகின்ற காரணங்களால் மின்ஓட்டத்தேவை அதிகப்படுகிறபோது இப்படிப்பட்ட தடைகள் ஏற்படுவதுண்டு. தடைகள் இல்லாமல் பார்த்துக்கொள்ளப்படும்.

இ. திருவிளையாட்டம் சிவகாமசுந்தரி ஆலய அம்மன் சிலை திருடு போனது குறித்து

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவரவர்களே நான் கீழ்க் கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர் களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

"தஞ்சாவூர் மாவட்டம் மாயூரத்தை அடுத்த திருவிளை யாட்டத்தில் உள்ள சிவகாம சுந்தரி ஆலயத்திலிருந்து சிவகாம சுந்தரி சிலை திருட்டுப் போனதையடுத்து அங்கு நிலவும் பதட்ட நிலை குறித்து".

திரு. ஐசரி வேலன் [அமைச்சரின் பேரவை செயலர்] : தஞ்சை மாவட்டம், மாயூரம் வட்டம், திருவிளையாட்டம் கிராமத்திலுள்ள அருள்மிகு சுயம்புநாதஸ்வாமி ஆலயத்திலிருந்து ஒரு அம்மன் விக்கிரகம் 10—3—1979 அன்று இரவு திருடப் பட்டது. மறு சாவி போட்டு பூட்டைத் திறந்து திருட்டு நடந்தி ருப்பதாகத் தெரிகிறது.

2. ஆலயத்தின் செயல் அலுவலர் 11—3—1979 அன்று மாயூரம் வட்டம் பெரம்பூர் காவல் நிலயைத்தில் புகார் செய்த தின் தொடர்பாக திருட்டுக் குற்ற எண். 50/79-ல் இந்தியன் குற்றவியல் சட்டக்கோவை (I. P. C.) 457 மற்றும் 380-ன் கீழ் வழக்குப்பதிவு செய்து புலன் விசாரணை துவங்கப்பட்டது. விரல் பதிவு (கை ரேகை) வல்லுநர் களவு நடந்த இடத்தை பரிசோதித்தார். காவல்துறையைச் சார்ந்த மோப்பம் பிடிக்கும் நாயும் அங்கே அழைத்துச் செல்லப்பட்டது. புலன் விசாரணை தொடர்ந்து நடக்கிறது.

3. மேற்படி அருள்மிகு சுயம்புநாதஸ்வாமி கோயிலில் இருந்த விக்கிரகங்கள் மொத்தம் 21. இந்தக் களவு நடப்பதற்கு முன்பே தொன்மை வாய்ந்த 14 விக்கிரகங்கள் பாதுகாப்பு நிமித்தம் அருகாமையிலுள்ள விளநகர் அருள்மிகு வரதராசப் பெருமாள் ஆலயத்தில் கொண்டு வைக்கப்பட்டுள்ளன. பொது மக்கள் ஆட்சேபம் தெரிவித்ததால் ஏனைய விக்கிரகங்கள் சிவன்

1979 ஏப்ரல் 27] [திரு. ஐசரி வேலன்]

கோயிலிலேயே இருந்தன. அவற்றில் ஒன்றுதான் களவு போனது. களவு நடந்தபின், மற்ற ஆறு விக்கிரகங்களையும் பெருமாள் கோயிலில் பாதுகாப்புக்காக கொண்டு வைக்கப்பட்டிருக்கிறது.

4. களவு போன அம்மன் விக்கிரகம் பிற்கால சோழ காலத்தைச் சார்ந்தது (கி.பி. 1200—1300) என்று சொல்லப் படுகிறது. இந்தக் கோயிலிலிருந்த எல்லா விக்கிரகங்களின் புகைப்படமும் பிடிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. புலன் விசாரணையை விரைவில் முடித்து, குற்றவாளிகளைக் கண்டுபிடித்து, களவு போன விக்கிரகத்தை மீட்க தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவர் அவர்களே, அருள்மிகு சுயம்புநாதஸ்வாமி ஆலயத்திலிருந்து சிவகாமி சுந்தரி அம்மன் சிலை விலை மதிப்புள்ள பஞ்ச லோகத்தால் ஆனது என்று தெரிகிறது. இப்படிப்பட்ட விலை மதிப்புள்ள சிலைகளை பாதுகாப்பதற்கு எந்தவிதமான வழியும் செய்யப்படாதால், மறு சாவி போட்டு பூட்டைத் திறந்து, திருட்டு நடந்ததாக அமைச்சர் செயலர் அவர்கள் சொன்னார்கள். இந்தச் சம்பவம் நடைபெற்று இரண்டுமாதங்களுக்கு மேலாகிறது. இந்தச்சம்பவத்திற்குப் பின்னால் அந்தக் கோவிலில் பணியாற்றுகின்ற கடை நிலை ஊழியர்கள்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து சுருக்க மாகக் கேளுங்கள்.

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவர் அவர்களே, அந்தக் கோவிலில் இருக்கக்கூடிய கடைநிலை ஊழியர்கள் அந்தத் திருட்டிலே சம்பந்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அப்பேர்ப் பட்டவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து திருட்டுப் போன அந்தச் சிலையைக் கைப்பற்ற முயற்சி எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவை செயலர்): தலைவர் அவர்களே அந்தச் சிலையைக் களவு செய்தவர்களைக் கண்டு பிடிப்பதற்கு காவல் துறையைச் சார்ந்தவர்கள் என்னென்ன ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமோ அவைகளை எல்லாம் செய்து கொண்டு வருகிறார்கள் என்று சொல்லியிருக்கிறேன். விரைவில், விலை மதிப்புள்ளதாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் அந்தச் சிலையைக் கண்டுபிடிப்பதற்கு இந்த அரசு தீவிர கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறது,